ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2046/5 - 2017 නොවැම්බර් මස 20 වැනි සඳුදා - 2017.11.20

*2046/5 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 10/3/1/3/63.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2015/WS/177.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் பாரிய மாத்தளை நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் உள்ளிழுப்பு மற்றும் பம்பும் நிலையம் நிர்மாணிப்பதற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், மாத்தளை மெதசிய பத்துவ சிறுபிரிவில், உல்பதபிடிய கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட 2017.10.30 ஆம் திகதிய வரைபட இல. மா 1713 இல் காட்டப்பட்டுள்ள, கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்:

**துண்டு இல. *1***

காணியின் பெயர்: ருக்அத்தன கஹ வத்த; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: திருமதி எஸ். பீ. வசந்த கோகிலம், இல. 2/103, கிவுல, மாத்தளை; விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். என். தினிபிரிய,
பிரதேச செயலாளர்,
இரத்தோட்டை.

பிரதேச செயலகம்,
இரத்தோட்டை,
2017, நவெம்பர் 15.

*12 - 43*

1A - G 26622 - 17 (2017/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*